Written by Administrator
Friday, 10 September 2010 00:00 - Last Updated Thursday, 07 October 2010 08:35

□□□□□□□□□□□□□□□□□□□□: 41□□□□□□□□□□□□□□: 11□□□□□□□□ □□□□□□ □2010

நகர்ப்புற குடிநீர் வழங்கல் முறை - ஓர் ஆய்வு

- சுபகேதா தாஸ்குப்தா

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் நகர்ப்புற மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. எனினும், அதில் பல நிறைகளும், சில குறைகளும் உள்ளன. இந்தியாவின் குடிநீர் வழங்கல் முறை தொடர்பான சில கொள்கை விளைக்கள் பற்றி தில்லி பிஜுள்ள கொள்கை ஆய்வு மையம் விரிவான ஆய்வை நடத்தியது. அதில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளை விளக்கவே இந்தக் கட்டுரை. குடிநீர் வழங்கல் தொடர்பான மத்திய அரசின் சில சிறப்பான நடவடிக்கைகளை இந்த ஆய்வு பட்டியலிடுகிறது. ஆனால் இதையும் தாண்டி குடிநீர் வழங்கல் முறை திருப்திபடுத்தும் வகையில் இல்லை. நகர்ப்புறசிறிதுத்தொடர்பான மத்திய அரசின் தற்போதைய கொள்கைத் திட்டங்கள் பற்றியும், அதனால் நகர்ப்புற குடிநீர் வழங்கல் முறையில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்தும் இந்த ஆய்வில் விளக்கப்பட்டுகிறது. குடிநீர் வழங்கல் துறையில் உள்ள சவால்களை மத்திய அரசு உணர்ந்து கொண்டதுபோலவும், கொள்கை அளவிலான சில சீர்திருத்தங்கள் தொடர்பாக கருத்தொற்றுமை ஏற்பட்டது போலவும் தோன்றினாலும், பெரும்பாலான சீர்திருத்தங்கள் இனி தான் செயல்படுத்தப்பட வேண்டும். சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதில் தொய்வு ஏற்படுவதேன்? என்று வினா எழுப்பும் இந்த ஆய்வுக் கட்டுரை, நகர்ப்புற குடிநீர் வழங்கல் துறை எதிர்காலத்தில் மக்களுக்கு சிறப்பான முறையில் சேவை செய்ய வேண்டுமென்றால், அதுதொடர்பான ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்கிறது.

இந்தியாவில் நகர்ப்புற குடி நீர் வழங்கல் துறைக்கு மத்திய அரசின் நிதியுதவி

முதலாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்தே குடிநீர் துறைக்கான நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. ஒவ்வொரு ஐந்தாண்டு திட்டகாலத்திலும் குடிநீர் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரிக்கப்பட்டு வருகிறது. குடிநீர் மற்றும் நுப்புறவுத் துறைகளுக்கான நிதிஒதுக்கீட்டு அளவைப் பொறுத்தவரை நகர்ப்புற குடிநீர் வழங்கல் துறைதான் மிக அதிக வளர்ச்சியை பெற்றிருக்கிறது.

வரைபடம் 1 :

ஐந்தாண்டு திட்ட காலங்களில் குடிநீர் வழங்கல் & நுப்புறவுத் துறைக்கான நிதிஒதுக்கீடு அதிகரிப்பு



ஆதாரம் : மத்திய திட்டக்குழு - 2002ம் ஆண்டு

குறிப்பு : வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அளவுகள் மத்திய, மாநில அரசுகளின் ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடு ஆகும்.

- சுபகேதா தாஸ்குப்தா, மூத்த ஆராய்ச்சியாளர், கொள்கை ஆராய்ச்சி மையம், புதுதில்லி.

குடிநீர் வழங்கல் திட்டங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள்ள பங்கு பற்றி, இந்திய அரசியல் சட்டத்தின் 74வது அரசியல் சட்ட திருத்தத்தில் தெளிவாக குறிப்பிடப்படுகிறக்கும் போதிலும், குடிநீர் வழங்கல் மற்றும் நுப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கான அடிப்படைப் பொறுப்பு இன்னும் மாநில அரசுகளிடமே உள்ளது. இந்த திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கீடு செய்யும் மத்திய அரசு, அந்த நிதி மாநில அரசுகளின் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்படுவதையும் உறுதி செய்கிறது. ஏற்கனவே கூறியதைப்போல குடிநீர் வழங்கல் துறைக்கு பல்வேறு ஐந்தாண்டு திட்டங்களிலும் அதிக நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது. கடந்த 6வது ஐந்தாண்டு திட்டம், 7வது ஐந்தாண்டு திட்டம், 8வது ஐந்தாண்டு திட்டம் மற்றும் தற்போதைய 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் குடிநீர் வழங்கல் மற்றும் நுப்புரவு தொடர்பாக கடைப்பிடிக்கப் படும் இந்திய தேசியக் கொள்கை, 1980ம் ஆண்டில் இ.நா.பொது அவையில் நிறைவேற்றப்பட்ட புதுதில்லி பிரகடனத்தின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். புதுதில்லி பிரகடனத்தில் இடம் பெற்றுள்ள முக்கியக் கூறுகளில் (அ) சுற்றுச் சூழலையும் சுகாதாரத்தையும் பாதுகாக்க வேண்டும் (ஆ) சிறிதுத்தங்களை மேற்கொண்டு ஒருங்கிணைந்த அணுகுமுறையை கடைப்பிடித்தல் (இ) குடிநீர் மற்றும் நுப்புரவு திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் நிலைப்படுத்துதலில் உள்ளூர் அமைப்புகளை வலுப்படுத்துவதுடன் அனைத்து வேலைகளையும் சமூதாய மேலாண்மையின்கீழ் கொண்டு வருதல். (ஈ) குடிநீர் வழங்கல் தொடர்பான சொத்துக்களை சிறப்பாக நிர்வகிப்பதன் மூலம் வலுவான நிதி நடைமுறைகளை உருவாக்குதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்கள் அனைவரும் நிர்ணயிக்கப்பட்ட விதிகள் மற்றும் தரத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் வேண்டும் என்பதுதான் 10வது ஐந்தாண்டு திட்டத்தின் இலக்காகும். அதன்படி ஒவ்வொருவருக்கும் 1.6கி.மீ தொலைவுக்குள் நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்பட வேண்டும். மலைப்பகுதிகளாக இருந்தால் 100 மீட்டர் உயரத்திற்குள் குடிநீர் கிடைக்கச் செய்தல், அந்தந்தப் பகுதிகளுக்குள் நிலவும் சூழலைப் பொறுத்து விதிகளை தளர்த்துதல், ஒவ்வொரு 250 பேருக்கும் ஒரு கை பம்பு அமைத்தல் ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதுமட்டுமின்றி குடிநீரை ஒரு இலவசப் பொருளாக பார்க்காமல், பொருளாதாரச் சொத்தாக கருதி நிர்வகிக்க வேண்டும் என்றும் 10வது ஐந்தாண்டு திட்டத்தில் வலியுறுத்தப்படுகிறது. இதுதவிர அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கவதுதான் முக்கிய இலக்காக உள்ளது. இதுவரை பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படாத பகுதிகள், நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 10 லிட்டருக்கும் குறைவான தண்ணீர் மட்டுமே வழங்கப் படும் பகுதிகள், தரம் குறைந்த தண்ணீர் வழங்கப்படும் பகுதிகள் போன்றவற்றில் தரமான குடி நீர் வழங்க முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் 10வது ஐந்தாண்டு திட்டத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

தேசிய மாதிரி கணக்கெடுப்பு, தேசிய சுகாதார ஆய்வு, மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆகியவற்றின் படி, நகர்ப்புறங்களிலும், கிராமப்புறப் பகுதிகளிலும் குடிநீர் மற்றும் நுப்புறவு சேவை, 10வது திட்டகால இலக்கின்படி, 100 சதவீதம் என்ற இலக்கை எட்டவில்லை என்றபோதிலும் பரப்புபரமாக உயர்ந்து வருகிறது எனத் தெரிய வந்துள்ளது. 1970ம் ஆண்டுகளில் இந்த சேவைகள் வெறும் 30 சதவீதம் பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டன. இது பரப்புபடியாக அதிகரித்து 200ம் ஆண்டில் 70 சதவீதம் என்ற அளவை எட்டியிருக்கிறது. இந்த சேவைகளை மேற்பார்வையிட்டு வரும் கூட்டு கண்காணிப்புக் குழுவின் கணிப்புப்படி, சேவை பெறுவோரின் அளவு 94-95 சதவீதம் என்ற நிலையை எட்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நகர்ப்புற குடிநீர் வழங்கல் கள நிலவரம்

குடிநீர் வழங்கல் பணிகள் கடந்த பல ஆண்டுகளாகவே விரிவுபடுத்தப் பட்டு வருவதாக திரும்பத் திரும்ப கூறப் பட்டுவரும் போதிலும், இதுவரை இந்தியாவில் எந்த ஒரு நகரிலும், மாநகரிலும் 24 மணி நேரமும் வாரத் தீறு 7 நாட்களும் குடிநீர் வழங்கப் படுவதில்லை. சென்னை, ஹைதராபாத் போன்ற பெரிய நகரங்களில்கூட இரு நாட்களுக்கு ஒருமுறை மூன்று மணி நேரம் மட்டுமே குடிநீர் வழங்கப்படுகிறது. தில்லியில் நாள்தோறும் 6 மணி நேரத்தீறு மட்டுமே, அதிலும் குறைந்த அழுத்தத்தில் குடிநீர் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னைப் பகுதிகளுக்கும் ஆர்வமாக தனித்தனியாக கட்டப்பட்டவுக்கும் குடியிருப்புகளுக்கும் குடிநீர் இணைப்பு இல்லை என்பதால், அவர்கள் தனியார் பகிருந்து அதிகவிலை கொடுத்துதான் தண்ணீரை வாங்க வேண்டியிருக்கிறது. அநேகமாகத்தில், குடிநீர் குழாய் இணைப்பு பெற்றுள்ள நடுத்தர மக்கள் வாழும் பகுதிகளுக்கு மிகக்குறைந்த கட்டணத்தில் அதிக தண்ணீர் வழங்கப்படுகிறது. இது தவிர எந்த கணக்கிலும் வராத தண்ணீரின் அளவு 50 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. எனவே, நகர்ப்புறங்களிலும் மாநகரங்களிலும் குடிநீர் வழங்கும் முறை ஒட்டை வளியாகவே இருக்கிறது. அதுமட்டுமின்றி மக்களுக்கு வழங்கப்

Written by Administrator
Friday, 10 September 2010 00:00 - Last Updated Thursday, 07 October 2010 08:35

படும் குடிநீர்களை கட்டணமும் மிகவும் குறைவாகும். குடிநீர் வழங்குவதற்கு ஆகும் செலவில் வெறும் 20 சதவீதம் மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. குடிநீர் வழங்கல் சேவைக்கான முதலீடுகள் அனைத்தும் பொதுவரி வருவாயில் இருந்தே செய்யப்படுகின்றன. குடிநீர் வழங்கல் கட்டமைப்புகளை பராமரிப்புக் போதிய நிதி இல்லாததால் அவை வேகமாக சீரழிந்து வருகின்றன. ஏற்கனவே சிறப்பான கட்டமைப்பு வசதிகள் இருக்கும் பகுதிகளில் அவற்றை சிறப்பாக வைத்துக்கொள்ள மறுமதிப்பீடு செய்யப்படுவது அவசியமாகும். ஆனால் பெரும்பாலும் மறுமுதலீடு சிறிய அளவிலேயே செய்யப்படுகிறது. இந்தவகை குறைபாடுகளால் குடிநீர் வழங்கல் முறை மிக மோசமான நிலைக்கு தள்ளப் பட்டு, தண்ணீர் வழங்கல் சேவையின் தரம் மேலும் குறைகிறது. மேலும் இந்த முறையை சீரமைப்பதும் மிகவும் கடுமையான ஒன்றாகிவிடுகிறது.

நகர்ப்புற குடிநீர் வழங்கல் துறைக்கான மத்திய அரசின் நிதி உதவி முறையில் மாற்றம்

அண்மைக்காலத்திலுள்ள, அதாவது 10வது மற்றும் 11வது ஐந்தாண்டு திட்டகாலத்தை செயல்படுத்தும்போதுதான், நகர்ப்புறங்களில் குறிப்பாக, குடிநீர் வழங்குவதில், இப்போதுள்ள நிர்வாகத் ஹுடைய சேவைமுறையையும் மேம்படுத்த வேண்டும் என்ற உண்மையை மத்திய அரசு உணர்ந்தது. 1) நகர்ப்புறங்களுக்கு திட்டக்குழு மூலம் அதிகநிதி ஒதுக்கீடு செய்தது. 2) நகர்ப்புற சீர்திருத்த ஊக்கத் தொகை நிதியம் (URIF), நகர்ப் புற சவால்களை சமாளிப்பதற்கான நிதி (CCF) மற்றும் ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் இயக்கம் போன்ற திட்டங்கள் 10வது மற்றும் 11வது ஐந்தாண்டு திட்டங்களில் உருவாக்கப்பட்டது ஆகிய வற்றின் மூலம்தான் நகர்ப்புற சீர்திருத் தத்தில் மத்திய அரசு முழுவீச்சில் இறங்கியது தெரிய வந்தது.

திட்டம் ஜூலை - 2010

கருத்தொற்றுமை ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள நகர்ப்புறங்களில் சேவை வழங்குவதில் உள்ள குறைகளை அனைத்து அமைப்புகளும் நன்றாக உணர்ந்துள்ளன. இந்த கருத்தொற்றுமை ஏற்பட்டிருக்கிறது. நகர்ப்புற சேவைகளை வழங்குவதில் மாறில அரசுகளும் உள்ளாட்சி அமைப்புகளும் அடையும் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக, தரச்சேவை மதிப்பீடுகள் என்ற பெயரில் புதிய அளவீடுகளை மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இப்புதிய அளவீடுகள் தான் எட்டப்பட வேண்டிய இலக்குக ளாகும். இவற்றை அளவிடுவதன் மூலம் குடிநீர் வழங்கல் முறையில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் செய்யப்பட்ட மாற்றங்களை கணக்கிட முடியும். இதற்கு முன் எத்தனை வீடுகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது என்பதன் அடிப்படையில் மட்டுமே நகர்ப்புற குடிநீர் வழங்கல் சேவை மதிப்பிடப்படு வந்த நிலையில், இந்த மாற்றம் மிகவும் முக்கியமானதாகும். அதுமட்டுமின்றி குடிநீர் இணைப்பு என்பதற்கான இலக்கணத்தையே தரச்சேவை மதிப் பீடுகள் மாற்றிவிட்டன. இதற்கு முன் குடிநீர் இணைப்பு என்பது எத்தனை வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்படுகி றது என்பதை மட்டும் அடிப் படையாக கொண்டிருக்கும். ஆனால், தரச்சேவை மதிப்பீட்டின்படி, ஒவ்வொரு வீட்டு வளாகத்திலும் உள்ள எத்தனை குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங் கப்பட்டிருக்கிறது என்பதையும் இது காட்டுகிறது. இந்தியாவில் குடிநீர் வழங்கலின் தரத்தை மதிப்பிட, தேசிய மாதிரி கணக்கெடுப்புகள் மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்புகளில் புதிய அளவீடுகள் பயன்படுத்தப்பட்டால், குடிநீர் வழங்கலின் உண்மையான அளவு தற்போதுள்ள 90 சதவீதத்தி லிருந்து 64 சதவீதமாக குறைந்துவிடும்.

திட்டம் ஜூலை - 2010

ஒரு அமைப்பு சார்ந்த பிரச்சினை" என்பதுதான்.

குடிநீர் வழங்கும் அதிகாரத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங் வகைசெய்யும் 74வது அரசியல் சட்ட திருத்தம் நிறைவேற்றப்பட்டுவிட்டபோதிலும், உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒரு குறிப் பிட்ட அளவுக்கே நிதி மற்றும் தொழில் நுட்பதிறன் உள்ளது என்பதில் தொடங்கி உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையிலான எல்லைச் சிக்கல், பணியாளர் பற்றாக் குறை வரையிலான பல்வேறு காரணங் களால், அந்த அதிகாரம் இன்னும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு முழுமையாக வழங்கப்படவில்லை. மாறில அரசும், உள்ளாட்சி அமைப்புகளும், மேம்படுத் தப்பட்ட தேவைக்கு ஏற்ற சேவைகளை, அதிலும் குறிப்பாக குடிநீர் வழங்கல் தொடர்பான சேவைகளை வழங்கவும், இப்போதுள்ள 64 சதவீத பகுதிகளுக்கான சேவை என்பதை 100 சதவீத சேவை என்ற அளவுக்கு உயர்த்துதல், குழாய் களின் மூலம் தனிநபருக்கு வழங்கப்படும் தண்ணீரின் அளவை நாள் ஒன்றுக்கு 70 முதல் 90 லிட்டர் என்ற அளவில்

அட்டவணை 1 : உலக சுகாதார மையம் (WHO), யுனிசெப், கூட்டு கண்காணிப்பு குழுவின் கணிப்பு ஆசியவற்றின் அடிப்படையான குடிநீர் மற்றும் துப்புரவு புள்ளி விபரங்கள்

ஆதாரங்கள்	துறை	அடையாள எண்	ஆண்டு	பயனடைந்த நகர்ப்புற மக்கள் (%)	பயனடைந்த சிறாப்புற மக்கள் (%)
இந்திய தேசிய மாதிரி கணக்கெடுப்பு 1996	குடிநீர் வழங்கல்	NSS 96	1996	93	75
	துப்புரவு	NSS 96	1996	50	6
இந்திய தேசிய சுகாதார கணக் கெடுப்பு 1998-99 சிறப்புத் தொகுப்பு	குடிநீர் வழங்கல்	DHS 99	1999	94	75
	துப்புரவு	DHS 99	1999	61	17
பலமுனை காரணிகள் ஆய்வு 2000	குடிநீர் வழங்கல்	MICS 00	2000	94	80
	துப்புரவு	MICS 00	2000	76	18

ஆதாரம் : யுனிசெப் (WHO), 2008.

வரைபடம் 3 : இந்திய நகரங்களில் மிகமோசமான குடிநீர் வழங்கல் சேவை



ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் இயக்கம் என்பது மத்திய அரசின் அடையாளத் திட்டங்களில் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இத்திட் டத்தின் மூலம் 2000 கோடி பாலர் நிதியை அடுத்த சில ஆண்டுகளில் நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்ய மத்திய அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. சில கட்டாய சீர்திருத் தங்களையும், சில விருப்ப சீர்திருத்தங் களையும் செய்ய மாறில அரசுகளும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் முன்வந்தால், அவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு நிதியுதவி அளிக்கும்.

ஜவஹர்லால் நேரு தேசிய ஊரக நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்படியான சீர்திருத்தங்களைச் செய்வதில் மத்திய மாறில அரசுகள், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவற்றுக்கிடையே சிறப்பான

29

வரைபடம் 4 : நகர்ப்புற குடிநீர் வழங்கல் துறையில் முதலீடு (Vs) JNNURM திட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள குடிநீர் தொடர்பான சீர்திருத்தங்கள்.

JNNURM இயக்கப்படி குடிநீர் திட்ட செயல்பாடுகள் 77 சதவீத திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு : 32 சதவீத சீர்திருத்தம் மட்டுமே நடைமுறை.



மத்திய அரசின் புதிய அணுகுமுறை பயனளிக்கிறதா?

இது ஒரு புதிய மாற்றம் என்பது ஒருபுறமிருக்க, ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் இயக்கத்தின் திட்டங்களைப் பார்த்தால், கடந்தகாலத் திட்டங்களைப் போலவே, இதிலும் பெரும்பாலான திட்டங்கள் குடிநீர் வழங்கல் சம்பந்தப்பட்டதாகவே இருப் தும் அதே நிலையில் குடிநீர் வழங்கல் சேவைக்குதான் ஒதுக்கப்படுகிறது என்பது தெரியவரும். மத்திய அரசின் சார்பில் 200க்கும் மேற்பட்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டுவருக்கும் நிலையில், இவற்றை செயல்படுத்துவதில் புதிய சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதில் மாறில அரசுகளும் உள்ளாட்சி அமைப்பு களும் மிகவும் பின்தங்கியுள்ளன. ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் செய்யப் பட்ட குடிநீர் வழங்கல் தொடர்பான சீர் திருத்தங்களை ஆய்வு செய்தால், 75 சதவீதத்தற்கும் கூடுதலான குடிநீர் வழங்கல் சீர்திருத்தத் திட்டங்களுக்கு கடந்த2009 ம் ஆண்டுமற்றும்அதற்கான நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பது தெரியவரும். 32 சதவீத சீர்திருத்தங்களை மட்டுமே மாறில அரசும் உள்ளாட்சி அமைப்புகளும் செய்திருக்கின்றன.

மாறில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் புரிந்துகொள்ளப்ப வேண்டிய முக்கியமான விஷயம் என்ன வென்றால் "ஒரு நாளைக்கு 15-16 மணி நேரம் வழங்கப்படும் குடிநீரை 24 மணி நேரம் என்ற அளவுக்கு உயர்த்துவதோ அல்லது திறனை 10 சதவீதம் அளவுக்கு உயர்த்துவதோ நிதி மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த விஷயம் ஆகும்; மேலெண்ணமில் சிக்கலாகும். ஆனால் ஒரு நாளைக்கு மூன்று மணி நேரம் மட்டுமே வழங்கப்படும் குடிநீரை ஒரேயடியாக 24 மணி நேரத்திற்கு உயர்த்துவதோ அல்லது 40 சதவீதம் அதிகரிப்பதோ நிதி மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த விஷயம் அல்ல. இது

30

இருந்து 135 லிட்டராக உயர்த்துதல், அளவு மானி பொருத்தப்பட்ட இணைப் புகளின் அளவை 20 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாக உயர்த்துதல், நாள் தோறும் 2 மணிநேரம் மட்டுமே வரும் நிலையை 24 மணி நேரமும் மின்னோட்ட வழங்கும் நிலையை ஏற்படுத்துவது. வருவாய் இல்லாத தண்ணீரின் அளவை 50 சதவீதம் என்ற அளவில் இருந்து 15 சதவீதம் என்ற நிலைக்கு குறைத்தல் ஆகிய இலக்குகளை எட்ட வேண்டு மானால் பேரிடியாக இருக்கிறது. பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட வேண்டும்.

குடிநீர் வழங்கல் தொடர்பான சுதந்திரமான ஆய்வின் அவசியம்

WHO, UNICEF ஆகிய அமைப்புகள் தெரிவித்துள்ள தகவல்களின்படி, "இந்தியாவில் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு பணிகள் தொடர்பாக விரிவான ஆய்வுகள் எதுவும் நடத்தப்படவில்லை. தொகுக்கப்பட்ட தகவல் விவரங்களோ அல்லது கணக்கெடுப்புகளோ இல்லை. குடிநீர் வழங்கல் துறையில் இப்போது உள்ள கட்டமைப்பு வசதிகள், வேலை வாய்ப்பை உருவாக்கும்திறன், பொருட்கள் மற்றும் சேவைப் பரிமாற்றம், சிறு தொழில் மேம்பாடு போன்றவை தொடர்பாக உடனடியாக பயன்படுத்தக் கூடிய தகவல்கள் எதுவும் இல்லை" என்று தெரியவந்திருக்கிறது.

இதைவிட, குடிநீர் வழங்கல் துறை அமைப்புகள் ஒவ்வொரு மாறிறத்திலும் ஒவ்வொரு வரலாற்றைக் கொண்டி ருப்பதை கருத்தில் கொண்டு, குடிநீர் வழங்கல் துறையை மேம்படுத்த என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பதை கொள்கை வகுப் பாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியாவில் குடிநீர் வழங்கல் துறையில் குறைந்த அளவே ஆராய்ச்சி செய்யப் பட்டிருப்பதாலும், தொழில் முறைத் தன்மையில்லாத கொள்கை வகுப்பு நடைபெறுவதாலும், ஏராளமானோர் சம்பந்தமில்லாத யோசனைகளைத் தருவதாலும் பயன்படாத யோசனைகள் மட்டுமே குவியும் என்பதையும் இதனால் நல்ல யோசனைகள் விரட்டியடிக்கப் படும் என்பதையும் எளிதில் யூகித்துவிட முடியும். ■